Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 346/2024

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 04-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர். | - | அய்யனார் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | ராமலிங்கம் | சமயம் | - | |
| கிராமம் | - | நாயனூர் | வயது | - | 37 |

04.02.2026

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது நாயனூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சின்னம்மா. அ.சா.2 எனது தம்பி முறை. எதிரிகளை தெரியும். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 03.00-04.00 மணியளவில் அ.சா.1 நிலத்தில் மாடுகளை மேய்த்துவிட்டு வீட்டிற்கு வந்துள்ளார். அதன் பிறகு சேகர் என்பவர்நிலத்தில் மாடு மேய்ந்துவிட்டதாக அ.சா.1ன் மாட்டை பிடித்து சென்று அவர்கள் வீட்டில் கட்டிவைத்துள்ளார்.

2. அதை அவுப்பதற்காக அ.சா.1 சென்ற போது எதிரி சேகர் அ.சா.1-ஐ கல்லால் தலையில் அடித்தார். சத்தம் கேட்டு வந்த பார்த்தீபனை எதிரிகள் தடியால் அடித்து காலால் எட்டி உதைத்தார்கள். எதிரி சுமதி பார்த்தீபனின் முதுகை கடித்துவிட்டார். பின்பு காயமடைந்த அ.சா.1-ஐ திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். போலீசார் விசாரணை செய்யவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய தேதியோ, மாதமோ, ஆண்டோ எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றால் சரிதான். அ.சா.2 - பார்த்தீபன் எங்க கூட தான் இருந்தார் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு

எதற்காக சென்றேன் என்றால் மீன் விற்றுக்கொண்டிருந்தேன். சுமாராக எத்தனை மணி இருக்கும் என்றால் 03.00-0400 மணி இருக்கும். நான் மாலை நேரத்தில் தான் மீன் விற்கிறேன் என்றால் சரிதான். நான் எந்த இடத்தின் அருகில் மீன் விற்கிறேன் என்றால் ஓம் சக்தி கோவில் அருகில். சண்டை ஓம்சக்தி கோவில் அருகில் நடந்ததா என்றால் இல்லை, திடீர்குப்பம் அருகே நடந்தது. ஓம்சக்தி கோவிலுக்கும், திடீர்குப்பத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் இரண்டு தெரு தள்ளி உள்ளது.

2. சண்டை நடந்த இடத்திற்கும் இரண்டு தெரு தள்ளி தான் மீன் விற்கிறேன் என்றால் சரிதான். யார் யார் என்னை என்ன செய்தார்கள் என்று தெரியாது, சத்தம் கேட்டு தான் சென்றேன் என்றால் ஆமாம் என்று சாட்சி சொல்லிவிட்டு, பின்னர் அங்கிருந்தவர்கள் எனது அம்மாவை அடிக்கிறார்கள் என்று சத்தம் கேட்கிறது என்று சொன்னதால் எனது தம்பி பார்த்தீபன் சென்றார், அவரை அடித்து தள்ளிவிட்டார்கள், பின்னர் சத்தம் கேட்டு நான் சென்ற போது தெவுடியா நீலாம் தெருவிலேயே வரக்கூடாது, உன்னைய சாவடிச்சுவிடுவோம் என்று சேகரும், மணிகண்டனும் அசிங்கமாக பேசினார்கள். எனது அம்மா அடிப்பட்டு கீழே விழுந்துகிடந்தார், எனது தம்பியும் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். பின்பு நான் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன்.

3. நான் சண்டை முடிந்த பிறகு தான் சென்றேன் என்றால் முடிந்த பிறகு போகவில்லை, அடித்து ரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள். சண்டை நடந்ததை நான் பார்த்தேனா என்றால் பின்னாடி தான் போனேன், நான் பார்க்கவில்லை. பார்த்தீபன் நீதிமன்றத்தில் சம்பவத்தை பார்க்கவில்லை என்று சொல்கிறார் என்றாலும், நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், நான்பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல, நடந்ததை சொல்கிறேன்.

4. அடிப்பட்டவர்களை நான் மருத்துவமனையில் சேர்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும், அ.சா.1 எனது சின்னம்மா என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM.
T.V.Nallur.